1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,43,16,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 56—காட்டுவள மூலதனச் செலவு.

திருவாளர்கள் செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. பொ. விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,34,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

134. 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் தேர்தல் நடத்தும் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 31.1.1979 ஆம் தேதியிடப்பெற்ற 164 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

135. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு சிமிண்டு பகிர்ந்தளித்தல் (உரிமம் வழங்கல்-முறைப்படுத்துதல்) ஆணையைச் செய்வது குறித்து தொழில் துறையின் 29.11.1978 ஆம் தேதியிடப் பெற்ற 1539-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1955 ஆம்

ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*114. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை (ஆறாவது சட்டமன்றப் பேரவை)

*115. அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1978-79 (ஆறாவது சட்டமன்றப் பேரவை).

116. 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஆறாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ், ஆங்கிலம்).

117. 1973-74 ஆம் ஆண்டிற்கான வணிகத் துறை அல்லாத துறைகள் பற்றிய இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஆறாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ், ஆங்கிலம்).

**118. கோரிக்கை எண் 32-பிற்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ் ஆங்கிலம்).

**119. கோரிக்கை எண் 32-பிற்பட்டோர் நலத் துறைக் கான அட்டவணைகள், 1979—80 (தமிழ், ஆங்கிலம்).

** 120. 1979-80 ஆம் ஆண்டிற்கான பிற்பட்டோர் நலத் துறையின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்)

** 121. கோரிக்கை எண். 25-சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

** 122. 1979-80 ஆம் ஆண்டில் சின்கோனாத் துறைக்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்)

** 123. 1979-80 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை யின் வணிக சம்பந்தமான வரவு செலவுத் திட்டம் (ஆங்கிலம்)

** 124. கோரிக்கை எண். 45-காட்டுவளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்)

** 125. 1979-80 ஆம் ஆண்டிற்கான காடுகள் பற்றிய சாத னைத் திட்டம் (ஆங்கிலம்)

கோரிக்கை எண்கள் 32, 25, 45, 47, 56-க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல், 31-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*31-3-1979 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

**31-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.